**ஜூன் – 2**

**"யேசு கிறிஸ்துவை, சிலுவையில் அறையப்பட்ட அவரையேயன்றி, வேறொன்றையும் உங்களுக்குள்ளே அறியாதிருக்கத் தீர்மானித்திருந்தேன்." - 1கொரி 2 : 2**

"இந்த சுவிஷேசத்தைத்" தவிர, பேச வேண்டிய, எழுத வேண்டிய, சர்ச்சை செய்ய வேண்டிய மற்ற விஷயங்கள் தங்களுடைய நேரத்தையும் கவனத்தையும் கவர இடங்கொடுத்திருக்கிற, பிரதிஷ்டை செய்திருக்கிறவர்களைக் கவனிக்கும்போது, அவர்கள் இப்பொழுது சுவிசேஷத்தின் ஊழியத்திற்காக நேரத்தையும், திறமையையும் திறம்படவும் சிக்கனமாகவும் நிர்வகிப்பதில் மிகவும் வைராக்கியம் கொண்டிருக்க அவர்களுக்குப் புத்தி சொல்லுகிறோம். மற்ற விஷயங்கள் எவ்வளவு சுவாரஸ்யமானவைகளாக இருந்தாலும், அந்த மற்ற விஷயங்களை இப்பொழுது மற்றவர்களுக்கு விட்டு விட வேண்டும். சகல அறிவும் நமக்காகப் போரும், வருங்கால ஜீவியத்தில் அவைகளை நாம் பெற்றுக் கொள்ளுவோம். ஏதாவதொரு தவிர்க்கக் கூடிய காரணத்திற்காக ஒன்றான மெய் சுவிசேஷத்தின் ஊழியத்திலிருந்து யார் விலகிப் போகப் பண்ணப்படுகிறார்கள் அல்லது இராஜ்யத்தை அடைவதற்காக முன்னேறி செல்லுவதில் மிகவும் அதிகமாக தடுக்கப்படுகிறார்கள் என்று நாம் அடிக்கடி கவனித்திருக்கிறோம்.

**- Z '95, 116 (R 1811).**

யேசு கிறிஸ்துவை, சிலுவையில் அறையப்பட்ட அவரை, என்பது நம்முடைய மீட்கும் பொருளையும், மாதிரியையும் குறிக்கிறது. ஆகையால் இது நமது நீதிமானாக்கப்படுதலையும், பரிசுத்தமாக்கப்படுதலையும் கொண்டதாயிருக்கிறது. இது கிறிஸ்து தன்னைப் பின்பற்றுகிறவர்களுக்கு என்னவாயிருக்கிறார் என்பதின் சுருக்கமாகும். தேவனுடைய பிள்ளைகளாகிய நம் ஒருவருக்கொருவரிலுள்ள நமது சிரத்தை, இந்த எண்ணத்தை உடையதாக இருக்க வேண்டும். இந்த எண்ணம் ஒருவருக்கொருவரிலுள்ள எல்லாச் சந்தர்ப்பங்களிலும் வியாபிக்க வேண்டும். கிறிஸ்துவின் உடன் சீஷர்களாகிய நாம் மாற்றெல்லாக் காரியங்களையும் தவிர்த்து, இந்த எண்ணத்தின் மீது நமது கவனத்தை லாபகரமாக ஒருமுனைப்படுத்த வேண்டும்.

**-P '32, 62.**

**ஒத்து வாக்கியங்கள் :-**

கலா 6:14; பிலி 3:8,13,14; அப் 5:30,31,42; 13:23; 26-33; 16:31; 17:2,3;18:5,6; 19:4; 20 :20,21; 26:22,23; ரோம 5:8-11; 1கொரி 1:17,24,30; 2:3-8;4:1,2; 3:5-10; 2கொரி 3:3,6; 4:5; 6:1.

**கோபுரவாசிப்பு : Z '12, 193 (R 5044)**

**வினாக்கள் :** இந்த வாரத்தில் நான் யேசுவை மட்டுமே சேவிக்க முயற்சி செய்தேனா? எப்படி? ஏன்? பலன்கள் என்ன?